‘மக்களைத் தேடி மருத்துவம்’: ஈரோடு மாவட்டத்தில்

# 2 கோடியாவது பயனாளியிடம் மருந்துப் பெட்டகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

ஈரோடு, டிச.21-

முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) ஈரோடு மாவட்டம், நஞ்சனாபுரம் கிராமத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் 2 கோடியாவது பயனாளி திருமதி.சுந்தரம்பாள் (வயது 55) என்பவரை நேரில் சந்தித்து நலம் விசாரித்து மருந்து பெட்டகத்தை வழங்கினார். அடுத்ததாக தொடர் சேவை சிகிச்சையில் உள்ள திருமதி.வசந்தா (வயது 60) என்பவரைச்சந்தித்து நலம் விசாரித்து மருந்து பெட்டகத்தை வழங்கினார்.

இந்நிகழ்விற்கு பிறகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான திட்டம் 2021 ஆகஸ்ட் திங்கள் 5-ஆம் தேதி கிருஷ்ணகிரி மாவட்டம், சாமனப்பள்ளியில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட போது அவர்கள் சொன்னது, முதல் பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை தருகிறேன், ஒரு கோடியாவது பயனாளிக்கும் மருந்து பெட்டகத்தை தருகின்ற நிகழ்வு தமிழ்நாட்டில் நடைபெற வேண்டும் என்று சொன்னார்கள். இந்த திட்டத்தில் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இயன்முறை சிகிச்சை, டயாலிசிஸ் என்று தொற்றா நோய்களுக்கான இம்மருத்துவத்தை வீடுகள் தோறும் தேடிச் சென்று மக்களுக்கு மருத்துவம் பார்ப்பது, மருந்துகள் தருவது. அந்தவகையில் இந்த திட்டம் 2021 இல் தொடங்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் 50 இலட்சமாவது பயனாளிக்கு சித்தாலப்பாக்கத்தில் உள்ள ஒருவருக்கு மருந்து பெட்டகம் தரப்பட்டது.

மீண்டும் முதலமைச்சர் அவர்களே திருச்சிக்கு வருகை புரிந்து 1 கோடி 01வது பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை தந்தார்கள். அந்தவகையில் இத்திட்டம் படிப்படியாக வளர்ந்து ஒட்டுமொத்த தமிழ்நாடு மக்களை சென்றடைந்திருக்கின்றது என்கின்ற வகையில் 02 கோடியாவது பயனாளியாக சுந்தரம்பாள் (வயது 55) என்கின்ற சகோதரி



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஈரோடு மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ், இரண்டு கோடியாவது பயனாளியான நஞ்சனாபுரத்தைச் சேர்ந்த திருமதி சுந்தராம்பாள் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவருக்கு மருத்துவப் பெட்டகத்தை வழங்கி, அவருக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகளை பார்வையிட்டு, விவரங்கள் கேட்டறிந்தார். இந்த நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் ப.செல்வராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜ கோபால் சுன்கரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள நஞ்சனாபுரம் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று மருந்து பெட்டகம் தரப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தொடர் சேவைப் பெறுபவர்கள் 4,29,71,772 பேர் இதில் பயன்பெற்று வருகிறார்கள்.

**ஐக்கிய நாடுகள் சபை விருது**

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்திற்கு கடந்த செப்டம்பர் மாதம் 5-ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள நியூயார்க் ஐ.நா சபையில் உலகில் தொற்றா நோய்களுக்காக மக்களைத் தேடி மருத்துவம் பார்க்கும் திட்டம் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதால் 2024ஆம் ஆண்டிற்கான ஐ.நா மன்றத்தின் விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது. *United Nation Interagency Task Force Award* 2024 என்கின்ற வகையில் விருது தரப்பட்டுள்ளது. அன்று விருது அறிவிக்கப்படும்போது மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் 1 கோடியே 97 இலட்சம் பேர் பயனடைந்து இருந்தனர். இன்று 2 கோடியாவது பயனாளிக்கு ம முதலமைச்சர் அவர்கள் மருந்து பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. இது இந்த திட்டத்தின் வெற்றியை வெளிப்படுத்துகிறது.

**திட்டத்தில் உள்ள பல்வேறு சிகிச்சைகள்**

உயர் இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 1,00,01,363 பேர், நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 49,45,745 பேர், உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 44,28,972 பேர், நோய் ஆதரவு சிகிச்சை பெறுபவர்கள் 5,40,822 பேர், இயன் முறை சிகிச்சை பெறுபவர்கள் 7,25,042 பேர், சிறுநீரகம் சிகிச்சை (டயாலிஸிஸ்) பெறுபவர்கள் 434 என்கின்ற வகையில் இதுவரை 2 கோடியை கடந்து இந்த சிகிச்சைகள் சென்றுக் கொண்டிருக்கிறது. அதே போல் தொடர் சேவை என்கின்ற வகையில் 04,29,71,772 பேர் பயன் பெற்றுள்ளார்கள்.

**ஈரோடு மாவட்டத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் நிலவரம்!**

ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தவரை 7 இலட்சத்திற்கும் மேலானவர்கள் இந்த சிகிச்சையில் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் நஞ்சனாபுரம் பகுதியில் மட்டுமே 1005 என்கின்ற வகையில் மக்கள் தொகை இருக்கின்றது. இதில் 136 பேர் மருத்துவ பயன் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு புதிதாக சுந்தரம்பாள் என்பவருக்கு உயர் இரத்த அழுத்தம் நோய் இருப்பதை கண்டறியப்பட்டு அவருக்கு மருந்து பெட்டகம் தரப்பட்டிருக்கிறது.

மக்களைத் தேடி மருத்துவம் எனும் இத்திட்டத்தில் 14,000 மேற்பட்ட மருத்துவத்துறை பணியாளர்கள் அர்ப்பணிப்போடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் முதலமைச்சர் அவர்களே நேரில் வருகைபுரிந்து 2 பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரை இந்த திட்டத்தை தொடக்கத்திலிருந்தே கண்காணித்து இத்திட்டத்தின் வளர்ச்சியை தொடர் ஆய்வு செய்ததன் காரணமாக மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் மகத்தான வெற்றி பெற்றுள்ளது.

**அம்மா கிளினிக் தொடர்பான கேள்விக்கு**

அம்மா கிளினிக் என்பது நான் ஏற்கெனவே தெளிவாக சொல்லிவிட்டேன், 1700 மருத்துவமனைகள் ஒரே ஒரு மருத்துவரோடு, செவிலியர் கூட இல்லாமல், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கேள்விக்கு பதில் சொல்லும்போது சுடுகாடு போன்ற இடங்களிலும் இம்மருத்துவமனையை வைத்திருந்தார்கள் ஒரு மருத்துவரை வைத்து, அதுவும் கூட மாநில அரசின் நிதி ஆதாரம் இல்லை, NHM என்று சொல்லக்கூடிய தேசிய நலவாழ்வு குழுமத்தின் நிதி ஆதாரம் கொண்டு, ஒரு வருடத்திற்கு மட்டுமே ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது. ஒரு வருடம் கழித்து தானாகவே அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது.

இந்த அரசு அம்மா கிளினிக்கை மூடியது போன்று தோற்றத்தை அவர் தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறார், ஏற்கெனவே இது சம்மந்தமாக அதற்கான ஆணைகளை காண்பித்து சட்டமன்றத்தில் பதில் கூறினோம். சுடுகாடு என்று சொன்னவுடன் எங்கே என்று கேட்டார், வாருங்கள் சைதாப்போட்டையில் சாரதிநகர் பகுதியில் உள்ள சுடுகாட்டில் ஒரு பகுதியை எடுத்து நீங்கள் அம்மா கிளினிக் அமைத்திருக்கிறீர்கள், இப்போதும் இருக்கின்றது வாருங்கள் நாங்கள் காண்பிக்கிறோம் என்று சொன்னேன், இப்போதும் சொல்கிறேன் அவர் வந்தால் காண்பிக்க தயாராக இருக்கின்றேன்.

எனவே அவர் ஏதாவது காரணங்களை சொல்வது எப்போதும் வாடிக்கையான ஒன்று, எனவே மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் என்பது இந்திய அளவில் அல்ல உலகளவில் வேறு எங்கேயும் செயல்படுத்தப்படாத திட்டம் என்பதால்தான் ஐ.நா மன்றமே இத்திட்டத்திற்கு விருது தந்திருக்கிறது

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

---

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட

# தி.மு.க. தலைமைச் செயற்குழுக் கூட்டம் நாளை (22.12.2024) நடைபெறும்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



ஏற்கனவே அறிவிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட தி.மு.க. தலைமைச் செயற்குழு கூட்டம் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நாளை **(22–12–2024) ஞாயிறு அன்று காலை 10.00 மணி அளவில்** சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள் : கழக ஆக்கப் பணிகள்**

குறிப்பு : ஏற்கனவே அனுப்பப்பட்ட அழைப்புக் கடிதத்தினை தவறாது கொண்டு வர வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

தொற்றா நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் புதுப்புரட்சி!

# ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின் கீழ் 2 கோடியாவது பயனாளிக்கு மருந்துப் பெட்டகங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘சாதனைச் சரிதம்’ எனப் பாராட்டு!

ஈரோடு, டிச.21-

மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் கீழ் இரண்டு கோடியாவது பயனாளிகளுக்கு மருந்துப் பெட்டகங்களை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இத்திட்டத்தை சாதனை சரிதம் என்று பாராட்டு தெரிவித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் இரண்டு கோடியாவது பயனாளிக்கு நேற்று முன்தினம் (19.12.24) மருந்துப் பெட்டகங்களை வழங்கியது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத் தளப்பதிவு வருமாறு:-

**நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பதில் புதுப்புரட்சி, ஐ.நா. அமைப்பின் விருது எனச் சாதனைச் சரிதம் எழுதிவரும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் இரண்டு கோடியாவது பயனாளிக்கு இன்று மருந்துப் பெட்டகங்களை வழங்கினேன்.**

**மருத்துவமனைகளை நாடிச் செல்லவோ, வீட்டுக்கு மருத்துவர்களை வரவழைக்கவோ வசதியில்லாத எண்ணற்றோருக்கு வீடுதேடிச் சென்று ‘பிசியோதெரபி’ அளித்து வாழ்வில் ஒளியேற்றும் சாதனையையும் சத்தமின்றிப் படைத்து வரும் இத்திட்டத்தின் வெற்றிக்குக் காரணமான 14 ஆயிரம் மருத்துவப் பணியாளர்கள் அனைவருக்கும் என் நன்றி.**



இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. சண்முகநாதன்

**டிசம்பர் 21 (2021)**



**இளமைப் பருவத்திலிருந்தே முத்தமிழறிஞர் கலைஞர்மீது மாறா அன்பு கொண்டு, அவர் மறையும் காலம்வரை அவர் ‘நிழலாக’ வாழ்ந்தவர். கழகம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மாற்றுக் கட்சி ஆட்சியாளர்கள் தன் மீது பழிவாங்கும் நடவடிக்கைக்கு உத்தரவிட்டாலும் கலைஞர் அவர்களின் அருகிலேயே இருந்தவர். குடும்பத்தாரைவிட அதிக நேரம் கலைஞர் அருகில் இருக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.**

**கலைஞரின் மனம் நினைப்பதை, உதடுகள் உச்சரிப்பதற்கு முன்பாகவே நிகழ்த்தி முடிப்பவர். கலைஞரின் மனக்குரலை – மனதின் எதிரொலியை எழுத்து வடிவத்தில் மொழிபெயர்க்கக் கூடியவராக இருந்தவர். “இந்தப் பிறவியே கலைஞருக்கானது” என்று சொல்லி, அரைநூற்றாண்டு காலம் கலைஞரின் உதவியாளராக இருந்ததோடு, அவரின் அன்புக்குரியவராகி, அவருக்குச் சுமைதாங்கியாக – இடிதாங்கியாக இருந்தவர்.**

**“நான் உறைந்து நிற்கிறேன். அவரின் அன்றலர்ந்த முகம் தவிர வேறெதுவும் என் மனதில் தோன்றவில்லை. உடன்பிறவா அண்ணனே.. உடன்பிறப்புகளின் தலைவரிடம் சென்றுவிட்டவரே! எங்களில் நீங்கள் என்றென்றும் வாழ்கிறீர்கள். எங்கள் ‘இயக்க’த்தில் நீங்கள் குருதியோட்டமாகக் கலந்திருக்கிறீர்கள்.” என்று கழகத் தலைவர் அவர்கள் அவரது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

அண்ணல் அம்பேத்கரை அவமானப்படுத்திய

# அமித்ஷாவைக் கண்டிக்காமல் வாய்மூடிக் கிடப்பது ஏன்?

## எடப்பாடி பழனிசாமிக்கு – அமைச்சர் எஸ்.ரகுபதி கேள்வி!



சென்னை, டிச. 21-

அண்ணல் அம்பேத்கரை அவமானப்படுத்திய அமித்ஷாவைக் கண்டிக்க கூட வேண்டாம் “வலிக்காமல் வலியுறுத்த” கூட மனமில்லாமல் அமைதி.... அமைதியோ அமைதி என ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார் பழனிசாமி என்று அமைச்சர் ரகுபதி தமது ‘ட்விட்டரில்’ பதிவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:

அண்ணல் அம்பேத்கரை அவமரியாதை செய்த அமித்ஷாவை கண்டித்து நாடே கொந்தளித்துக் கிடக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கடும் கண்டனத்தைப் பதிவு செய்ததோடு, இன்று நாடு தழுவிய போராட்டத்தில் திமுகவும் பங்கெடுக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

அதன்படி தமிழ்நாடு முழுக்க திராவிட முன்னேற்ற கழகம் கண்டன ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகிறது. நாடாளுமன்ற வளாகத்திலும் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மிகக் கடுமையாக எதிர்ப்பினை பதிவு செய்து வருகிறார்கள்.

சட்டமேதை, சமத்துவப் போராளி அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு களங்கம் ஏற்படுத்த முயலும் சனாதன சக்திகளுக்கு துணைபோகும் விதமாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாய் மூடிக்கிடக்கிறார்.

ஒன்றிய பாஜக அரசு மக்களாட்சியை அழிக்க கொண்டுவரத் துடிக்கும் ஒரே நாடு ஒரே தேர்தல் பற்றி எதுவும் கூறாமல் அமைதி, இஸ்லாமிய சமூக மக்களை இழிவாக பேசிய நீதிபதி விவகாரத்திலும் அமைதி, அண்ணல் அம்பேத்கரை அவமானப்படுத்திய அமித்ஷாவைக் கண்டிக்க கூட வேண்டாம் “வலிக்காமல் வலியுறுத்த” கூட மனமில்லாமல் அமைதி....அமைதியோ அமைதி என ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறார் பழனிசாமி.

**பழனிசாமியைக் கண்டால் கேட்டுச் சொல்லுங்கள்!**

யார் கண்ணில் படாமல் பதுங்கு குழியில் பதுங்கி கொண்டிருக்கும் பழனிசாமியைக் கண்டால் யாரேனும் கேட்டுச் சொல்லுங்கள் அண்ணல் அம்பேத்கர் யார் என்றாவது அவருக்கு தெரியுமா என்று.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

---

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணி முன்னாள் அமைப்பாளர்

# புலவர் ம.சுப்பிரமணியன் மறைவு!

## பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், டிச. 21–

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் முன்னாள் அமைப்பாளர் புலவர் ம.சுப்பிரமணியன் அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த புலவர் ம.சுப்பிரமணியம் அவர்கள் கல்வித்துறையின் துணை இயக்குனராக இருந்து ஓய்வு பெற்றவர் ஆவார். அவர் பணியில் இருந்து ஓய்வு பெற்றதும் அவருடைய கழக பற்றினையும் தமிழ் ஆர்வத்தையும் கருதி திருவாரூர் மாவட்ட தி.மு.க.வின் பரிந்துரையின்படி அவரை இலக்கிய அணியின் அமைப்பாளராக தலைமைக்கழகம் நியமனம் செய்தது.

கழக இலக்கிய மேடைகளில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், ஆகியோரது கருத்துக்களையும், பகுத்தறிவு சிந்தனைகளையும் மாணவ மாணவியர்களுக்கு மிக எளிய முறையில் எடுத்துக் கூறி கழகப் பணி ஆற்றி வந்த புலவர் ம.சுப்ரமணியன் அவர்களின் மறைவு கழகத்திற்கு பேரிழப்பாகும்.



மறைந்த புலவர் ம.சுப்ரமணியன் அவர்களுக்கு ஜோதி என்கிற மனைவியும் அருள், ரவிவர்மன் என்கிற மகன்களும், மருத்துவர் காவியா என்னும் மகளும் உள்ளனர். அன்னாரின் மறைவின் தகவல் அறிந்த மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகளுடன் அன்னாரது இல்லத்திற்குச் சென்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

ஒன்றியச் செயலாளர்கள் பாலச்சந்தர், சேகர் கலியபெருமாள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், திருவாரூர் மாவட்ட தி.மு.க. இலக்கிய அணியின் சார்பிலும், மறைந்த புலவர் சுப்பிரமணியன் அவர்களுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. அன்னாரின் இறுதி ஊர்வலம் 19.12.2024 அன்று மாலை கொரடாச்சேரி ஒன்றியத்தில் உள்ள பத்தூர் கிராமத்தில் நடைபெற்றது.